REGD. No. M. 6311

PHONE No. 55630

தனி இதழ்
ஒரு அணா
இலங்கையில் 10 சதம்

மலர் 1] [இதழ் 180

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர்.. அண்ணாதுரை

சந்தா விபரம்
உள்நாடு (இலங்கை உட்பட)

ஆண்டு	ரூ. 24—0—0
6 மாதம்	ரூ. 12—0—0
3 மாதம்	ரூ. 6—0—0
வெளிநாடு:	
ஆண்டு	ரூ. 30—0—0
6 மாதம்	ரூ. 15—0—0
3 மாதம்	ரூ. 7—8—0

"THE NAM NADU" A TAMIL DAILY ! THE OFFICIAL ORGAN OF: THE D.P.F

சென்னை: மார்கழி 25உ சனி (9—1—54) ★ ★ ★ வெளியூர்: மார்கழி 26உ ஞாயிறு (10—1—54)

பட்டப் படிப்பால் பயனில்லையாம்!

நிலை உயர, நிர்வாகத் துறைப் பயிற்சியாம்!

மனித இயல்பு பற்றிய படிப்பில் பட்டம் பெறும் முறை ஆலோசிக்கப்படுமாம்

இந்தியப் பல்கலைக் கழக நிபுணர் குழுவின் கண்டுபிடிப்பு!

கல்கத்தா, ஜன. 8—

"அரசாங்க வேலைகளுக்கு ஆட்களைத் தேர்ந்தெடுக்கும்போது, பல்கலைக் கழகங்களில் அளிக்கப்படும் பட்டங்களுக்கு அதிகமாக முக்கியத்துவம் அளிக்கக் கூடாதென்பதே இந்தியப் பல்கலைக் கழகங்கள் நியமித்த நிபுணர் குழுவின் கருத்தாகும்.

"ஆனால், தொழில் நுணுக்க வேலைகளுக்கு ஆட்களைத் தேர்ந்தெடுக்கும்போது மட்டும், பல்கலைக் கழகம் அளிக்கும் பட்டங்களுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படுமென்று இக்குழு வற்புறுத்தியது.

"தங்கள் நிலையிலும் கவுரவத்திலும் முன்னேற்றமடையச் செய்ய நிர்வாகத் துறைகளில் தனியாக ஊழியர்களுக்கு அரசாங்கம் பயிற்சி நடத்தலாம்.

"அரசாங்க வேலைகளுக்கு ஆட்கள் தேர்ந்தெடுக்கும் முறையை மாறுதல் செய்யும்வரை, மனிதத்தன்மை பற்றிய படிப்புகளில் உயர்தரப் பல்கலைக் கழகப் பட்டங்களைப் பெற சில வசதிகளை அளிக்கும். இடைக்கால நடவடிக்கை பற்றி பல்வேறு பல்கலைக் கழகங்களும் ஆலோசிக்கும்.

தொழில் உள்ள ஆட்கள், உயர்தரப் பல்கலைக் கழகப் படிப்பு பெறுவது பற்றி இக்குழு நியமிக்கப்பட்டது.

"இடைக்கால நடவடிக்கையாக சலுகைகள் அளிக்கப்பட்டால் ஏற்கப்பட்டுள்ள கல்வி நிலையங்களில், காலையில் அல்லது மாலையில் சில நிபுணர்களுக்கு கூட்டப்பட்டுப் பாதி நேரம் படிக்க வேண்டும்."

வர்த்தகர்களின் விற்பனை வரி மீது வரி விதிக்க முடியாது

உயர் நீதி மன்றம் தீர்ப்பு

சென்னை, ஜன. 8—

"பதிவு செய்யப்பட்ட ஒரு வியாபாரி, வாங்கி உபயோகிப்போருக்கு விற்பனை செய்த சாமான்கள் மீது விற்பனை வரி வசூலித்து, அதை சர்க்காருக்குசெலுத்திய பின்னர், அந்த விற்பனைத் தொகையையும் மொத்த விற்பனைத் தொகையில் சேர்த்து, மீண்டும் வரி விதிக்கக் கூடாது."

விற்பனை வரி அப்பீல் டிரிபியூனல் தீர்ப்பை எதிர்த்து சென்னை சர்க்கார் தொகுத்த அப்பீலை தள்ளுபடி செய்து, நீதிபதிகள் சத்தியநாராயணாவும், பி. ராஜகோபாலனும் அளித்த தீர்ப்பில் மேற்கண்டவாறு குறிப்பிட்டனர்.

⊙⊙⊙⊙⊙⊙⊙⊙⊙⊙⊙

கடலூருக்கு

16—1—54 சனிக்கிழமை

தோழர்கள்

அண்ணாதுரை

கருணாநிதி

மதியழகன்

வருகை தருகிறார்கள்

⊙⊙⊙⊙⊙⊙⊙⊙⊙⊙⊙

சென்னைக்குப் பிரிட்டிஷ் சர்க்கரை

சென்னை, ஜன. 8—

பிரிட்டனில் சுத்தம் செய்யப்பட்ட 7,500 டன் சர்க்கரை, சென்னை மாநிலத்திற்காக 'எல்ம்ஹில்' என்ற கப்பலில் இன்று சென்னை வந்து சேர்ந்தது. இதுபோலவே 9,500 டன் சர்க்கரை இம்மாதக் கடைசியில் சென்னைக்கு வருமெனத் தெரிகிறது.

நாகா மலைகளில் எண்ணெய்?

ஷில்லாங், ஜன. 9—

அஸ்ஸாமில், நாகா மலைகளின் சில பகுதிகளில் எண்ணெய் தோய்ந்திருப்பதாக பூதத்துவ நிபுணர்கள் கண்டுபிடித்துள்ளனர். எண்ணெய் தவிர, நிலக்கரி, செம்பு, நிக்கல் முதலிய பல கனிப் பொருள்களும் கிடைக்கலாம் எனத் தெரிகிறது.

திராவிட சட்ட சபை கட்சி

— (:) —

தோழர் அண்ணாதுரையுடன் சந்திப்பு

சென்னை, ஜன. 9—

திராவிட சட்ட சபைக் கட்சித் தலைவர் தோழர் சுயப்பிரகாசம், எம். எல். ஏ., அவர்களும், உறுப்பினர்களான தோழர்கள் ராகவனார், சண்முகம், ரத்தினம், ரத்தினசாமி, சுப்பிரமணியம், சேனாபதி, சம்பந்தம், டி. கிருஷ்ணமூர்த்தி ஆகிய எம். எல். ஏ.-க்களும், 8-ந் தேதி பிற்பகல் பொதுச் செயலாளர் தோழர் சி. என். அண்ணாதுரையைச் சந்தித்து, அரசியல் நிலைமை பற்றியும், திராவிட சட்ட சபைக் கட்சி குறித்தும் பேசினர்.

தோழர் ஏ. கோவிந்தசாமி, எம். எல். ஏ. உடனிருந்தார்.

மீண்டும், பிப்ரவரி திங்களில் சந்திப்பதென முடிவு செய்யப்பட்டது.

'வேலையில்லாத் திண்டாட்டத்தை உண்டாக்கும் தொழில்மயம் வேண்டாம்'

—[o]—

குடிசைத் தொழில்களுக்கு ஆதரவு அளிப்பதன் நோக்கம் பற்றி உற்பத்தி மந்திரி

பம்பாய், ஜன. 9—

"வேலையில்லாத் திண்டாட்டத்தை உண்டாக்கும் தொழில் மயமாக்கும் முயற்சிகளை, சர்க்கார் விரும்பவில்லை,"

என்று இந்திய சர்க்கார் உற்பத்தி மந்திரி கே. சி. ரெட்டி கூறியுள்ளார்.

"வேலை அநேகருக்குக் கிடைக்க வழி ஏற்பட வேண்டும் என்பதற்காகவே குடிசைத் தொழில்கள், சிறு தொழில்கள் ஆதரிக்கப்பட்டு வருகின்றன," என்றும் அவர் தெரிவித்தார்.

சட்ட சபை திராவிடக் கட்சி கண்டு 'அசல் தேசிய'ங்களின் சீற்றம்!

—(:)—

மக்கள் நலனில் அவர்களுக்குத்தான் அபார அக்கரையாம்!

விடாமல் போராட்டம் நடத்தப் போகிறார்களாம்!

சென்னை, ஜன. 8—

"மக்களுக்கு உடனடியாக நிவாரணம் அளிக்க வேண்டும் என்ற திட்டத்தின்கீழ், ஐக்கிய முன்னணியிலிருந்து பிரிவதற்கான காரணம் எதையும் நாங்கள் காணவில்லை,"

என்று, முற்போக்கு சுயேச்சையாளர் குழுவைச் சேர்ந்த ஏழு எம். எல் ஏ.-க்கள் இன்று ஒரு அறிக்கையில் தெரிவித்துள்ளனர்.

சட்டசபை முற்போக்கு சுயேச்சையாளர் குழுவைச் சேர்ந்த ராஜா சிதம்பரம், பழனியாண்டி, வி. ஆர். கிருஷ்ணய்யர், டாக்டர் சிற்றம்பலம், பி. சொக்கலிங்கம் பிள்ளை, மாணிக்கசுந்தரம், என். பரமசிவம் ஆகியோர் ஒரு அறிக்கையில் கூறுவதாவது:—

"ஆந்திர மாகாணம் அமைக்கப்பட்ட பிறகு, ஐக்கிய முன்னணியும் முற்போக்கு சுயேச்சையாளர் குழுவும் சிறிது மாற்றமடைந்திருக்கின்றன.

"முற்போக்கு சுயேச்சையாளர் குழுவைச் சேர்ந்த சிலர் ஐக்கிய முன்னணியிலிருந்து விலகி, சட்டசபைக்குள் திராவிட கட்சி என்ற ஒரு தனிக் கட்சியை அமைத்துள்ளனர். ஆனால், நாங்கள் பழைய குழுவிலேயே இருக்கிறோம்.

"மக்களுக்கு உடனடியாக உதவி அளிக்கும் திட்டத்தின்கீழ், நாங்கள் ஐக்கிய முன்னணியில் சேர்ந்தோம். அந்தத் திட்டத்தை அமுல் நடத்த ஐக்கிய முன்னணி இப்பொழுதும் பாடுபட்டு வருகிறது. ஆகவே, ஐ. மு.-விலிருந்து விலகுவதற்கான காரணம் எதையும் நாங்கள் காணவில்லை.

'ஐ. மு.-வில் தொடர்ந்து இருந்து, அந்தத் திட்டத்தை அமுல் நடத்த உறுதி கொண்டிருக்கிறோம்.

"பிற்போக்கு காங்கிரசை எதிர்ப்பது போலவே, வகுப்புவாதத்தையும் எதிர்க்கிறோம். வகுப்பு வாதமும், காங்கிரஸ் பிற்போக்குத்தனமும் ஒன்றை ஒன்று எதிர்த்தாலும், உண்மையில் அவை ஒன்றை ஒன்று பலப்படுத்துகின்றன என்றே நாங்கள் கருதுகிறோம்.

"சட்டசபையில் எங்கள் தரப்பின் பலம் தற்காலிகமாக குறைந்திருந்தாலும், ஐ. மு. திட்டத்துக்கும், அதனை அமுல் நடத்த நாங்கள் விடாமல் நடத்தும் போராட்டத்துக்கும் மக்களிடையே இன்னும் அதிக ஆதரவு கிடைக்கும். கடந்த இரண்டரை ஆண்டு கால அனுபவம்; இந்த உண்மையைத்தான் உணர்த்தியிருக்கிறது.

"மக்களின் நலனில் அக்கரை கொண்டவர்கள் என்ற முறையில், மக்களுக்கு நன்மை செய்யும் நடவடிக்கைகளை யார் எடுக்க முன்வந்தபோதும், அவற்றை நாங்கள் ஆதரிப்போம். எல்லா எதிர்க்கட்சி குழுக்களுடனும் நெருங்கிய உறவுகொள்ள நாங்கள் விரும்புகிறோம். ஐ. மு. திட்டத்தின் அடிப்படையில் ஒவ்வொரு விஷயத்திலும் அவர்களுடைய ஒத்துழைப்பை நாங்கள் நாடுகிறோம்."

பாருளேகர் குழு அறிக்கை

அடுத்த சட்ட சபைக் கூட்டத்தில் விவாதிக்கப்படும்

சென்னை, ஜன. 8—

ஆரம்பக் கல்வித் திட்டத்தை, பரிசீலனை செய்த பாருளேகர் கமிட்டியறிக்கையின் மீது, அசெம்பிளி விவாதம் அடுத்த சபைக் கூட்டத்தில் நடக்க ஏற்பாடு செய்யப்படுமென்று இன்று அசெம்பிளியில் நிதி அமைச்சர் சுப்பிரமணியம் சொன்னார்.

அறிக்கையை சபை முன் வைப்பதற்கு முன்னால், சம்பந்தப்பட்ட இலாகா, அதை பரிசீலிக்கும் என்று மந்திரி சொன்னார்.

நம் நாடு

சென்னை 9—1—1954 சனி

இதில் என்ன ஆசையோ?

உத்தமர் காந்தியார் உயிரோடிருந்து, காங்கிரஸ் கட்சியின் சில பல நடவடிக்கைகளைக் கண்காணித்துவந்த காலத்தில், உயர்ந்ததெனக் கண்டதை ஒப்புக்கொண்டு பாராட்டியும், தாழ்ந்ததெனக் கண்டதை ஏற்க மறுத்து, கண்ணியமான முறையில் கண்டித்தும் வந்திருக்கிறார், நமது பொதுச் செயலாளர். இது, நாகரீகமான செயலேயாகும்; மக்களாட்சி முறையுடன் ஒன்றியிருப்பதேயாகும்.

கருத்து மாறுபாட்டுக்காக, ஒருவரின் தவறை எடுத்துக் காட்டுவது, அதுவும். உயர்ந்த முறையில் பொருளுடை காரண காரியங்களைக் கொண்டு மறுப்பது, எந்த வகையிலும் தவறிழைத்த ஒருவரை தனித்த முறையில் குறைத்துப் பேசினதாக நியாய புத்தி படைத்த ஒருவரும் கொள்ள மாட்டார்.

ஒருவரின் தவறை எடுத்துக் காட்டப்பட்டதினாலேயே, அத் தவறைச் செய்துள்ளவராகக் கொள்ளப்பட்டவரை, தனித்த முறையில் அவமதித்துத் தூற்றியதாகவும் நல்லறிவாளர்கள் முடிவுக்கு வரமாட்டார்கள். குறிப்பிட்ட ஒரு துறையில், ஒருவரின் போக்கு, தவறுடையதாக இருக்கிறது என்று சுட்டிக் காட்டப்படுவதின் மூலமாக, அவரிடம், மற்றவர் பாராட்டக்கூடிய நல்ல பண்புகள் எதுவும் அறவே கிடையாது என்று, தவறு கண்டு விண்டவர் கொண்டு இருப்பதாக முடிவு கட்டி விடுவதும் குறையுடையதாகும்.

ஒருவரின் குறையை எடுத்துக் காட்டுவது, அவரைத் தூற்றித் திரிவதற்கு ஒப்பானது என குறுமதியினர்தான் விளக்கம் தர முற்படுவர். இந்த வக்கிர புத்தி, நமது நாட்டு காங்கிரஸ் ஏடுகளின் பிறவிக் குணமாகும்.

இந்தியத் துணைக் கண்டம் விடுதலை பெறுவதற்கு முன்னரும், இதே விஷமப் புத்தியைத்தான் அந்த ஏடுகள் கொண்டிருந்தன. விடுதலைக்குப் பின்னரும் அந்த ஏடுகளின் குணக்கேடு பழுது பார்க்கப்பட்டதாகத் தெரியவில்லை. அன்றேபோல் இன்றும் பழுது பார்க்கப்பட வேண்டிய அபாய நிலையிலேயே அவைகளின் நாசப் பார்வை உள்ளது.

வேலூருக்கு பொதுச் செயலாளர் அண்ணாதுரை அவர்கள், உலக உத்தமரின் சிலையைத் திறந்து வைக்க, நகராட்சி மன்றத்தினரால் அழைக்கப்பட்டு, சென்றிருந்த காலை, அவருக்கு மன்றத்தினர் ஒரு பாராட்டு இதழும் அளித்துள்ளனர். அதற்கு, தமது நன்றியை அறிவித்துக்கொள்ளும் முறையில் மேற்கொள்ள வேண்டிய நல்ல பல கருத்துக்களை அவர் வெளியிட்டுள்ளார். அதன் முழு விவரத்தையும் நமது வாசகர்கள் நேற்றைய 'நம் நாடு' இதழில் கண்டிருப்பர். நிற்க,

இந்தச் செய்தியை நாட்டு மக்களுக்குத் தர முன்வந்த 'சுதேசமித்திரன்', தனது 'ஆசை'யையும், நச்சுத்தன்மையையும் காட்டிக்கொள்ள முனைந்திருக்கிறது. அதன் வேலூர் நிருபரும் தனது இயல்பு கெடாமல் தனது விருப்பம் போலவும், பத்திரிகையின் நோக்கிற்கும் போக்கிற்கும் ஒப்பவும், அந்தச் செய்தியை வெட்டியும், ஒட்டியும் 'சு. மி.'க்கு வழங்கியுள்ளார். 'சு. மி.'யும் விஷமமான தலைப்புகளிட்டு, அச்செய்தியை வெளியிட்டு இருக்கிறது.

"காங்கிரஸ் கட்சியுடன் தி. மு. க. ஒத்துழைக்க வேண்டும்."

"ராஜாஜி மந்திரி சபைக்கு ஸ்ரீ அண்ணாதுரை பாராட்டு,"

மேலே எடுத்துக் காட்டியுள்ள இரண்டும், நகராட்சி மன்ற வரவேற்புச் செய்திக்கு 'சு. மி' தந்துள்ள தலைப்புகள் ஆகும்.

•

பொதுச் செயலாளர் பேச்சுக்கும், 'சுதேசமித்திரன்' இதழுக்குக் கிடைத்துள்ள செய்திக்கும், அந்தச் செய்தியை வெளியிட்டு, அதற்கு அந்த இதழ் கொடுத்துள்ள தலைப்புக்கும் ஏதாவது தொடர்பு இருக்கிறதா என்பதை வாசகர்கள் சிந்திக்க வேண்டும்.

"வேலூர் நகர் ஆட்சி மன்ற உறுப்பினர்கள், தமது நிர்வாகத்தைக் கூட்டு முறையில், செவ்வனே நடத்தி வரும் செய்தி கேட்டு மகிழ்கிறேன். இந்தத் திறமை வளர வேண்டும் என விரும்புகிறேன்," என்றும்,

"அரசியல் ஆளும் கட்சிக்கு, மாற்றுக் கட்சிக்காரனாகிய எனக்கு; இந்த வரவேற்பை அளிக்கும் பண்பை, நான் வரவேற்கிறேன். இந்தப் பண்பு, சாதாரணமாக நாம், நாட்டில் காணமுடியாததற்கரிய ஒன்று. எதிர்க் கட்சிகளை, மாற்றுக் கட்சிக்காரர்கள் உபசரிக்கும் அரசியல் நாகரீகம், நமக்கு மிக மிகத் தேவை. எதிர்க் கட்சிகள் என்ன கூறுகிறது என்பதை அறியும் ஆசை ஒவ்வொருவருக்கும் ஏற்பட வேண்டும். அவைகள் கூறும் கருத்துக்களைக் கேட்காமல், எதிர்க் கட்சிகள் என்றாலே, எரிச்சல் கொள்ளுவது, வளரும் ஜனநாயகத்துக்கு நல்லதல்ல," என்றும், பொதுச் செயலாளர், பல திறப்பட்ட அரசியல் கட்சிகளுக்கிடையேயும் எப்படிப்பட்ட ஒத்துழைப்பு இருக்க வேண்டும், அந்த ஒத்துழைப்பும் எந்த முறையில் அமைய வேண்டும், அதுவும் எந்தெந்தக் காலத்தில் கைக்கொள்ளப்பட வேண்டும் என்ற அனைத்தையும், வெள்ளை அறிவினருக்கும் புரியும்படி விளக்கிக் காட்டியுள்ளார்.

பொதுச் செயலாளரின் இந்தச் சாரமான பேச்சு முழுவதையும் ஒருமுறை படிக்கும் எவருக்கும், இதற்கு 'சு. மி.' கொடுத்துள்ள முதல் தலைப்பு கொஞ்சமும் பொருந்தாது என்ற முடிவிற்கே வருவர். தனக்குள்ள 'அறிவின்மை' காரணமாகத்தான் இத்தகைய செய்திக்கு அதுபோன்ற தலைப்புக் கொடுத்தது என்று, 'சு-மி.'-க்குள்ள அறிவுத் திறனை மறந்து, ஆத்திரக்காரர்தான் அவ்வாறு தூற்றக் கிளம்புவர். ஆனால், 'சு.-மி.'-யின் பரம்பரை தெரிந்தவர்கள், அந்த இழிக்கு 'சு.-மி.'-யை உள்ளாக்க முன்வர மாட்டார்கள்.

"காங்கிரஸ் கட்சியுடன், திராவிட முன்னேற்றக் கட்சிக்காரர்கள் ஒத்துழைக்க வேண்டும்,"

என நமது பொதுச் செயலாளர் குறிப்பிட்டதாக, 'சு.-மி.'-யின் வேலூர் நிருபர் எழுதுகிறார்.

'கேழ்வரகில் நெய் வடிகிறது' என்றால், சொல்லுகிறவருக்குத்தான் மதி இல்லை என்றால், கேட்பவருக்குமா அந்த மதி இல்லாமல் இருக்க வேண்டும்!

அதாவது, முரண்பட்ட கொள்கை கொண்ட இரண்டு அரசியல் கட்சிகள் எல்லாத் துறைகளிலும் ஒத்துழைக்க முடியாது, என்ற அரசியல் அரிச்சுவடியும் தனக்குத் தெரியாது, என்ற புல்லறிவை, நிருபர்தான் காட்டிக்கொண்டார் என்றால், 'சு.-மி.' பொறுப்பாசிரியருமா அதே குறை தமக்கும் இருப்பதாக நடிக்க முன்வர வேண்டும்!

காங்கிரஸ் கட்சிக்கு ஏற்பட்டுள்ள சீரழிவையும், தி. மு. கழகத்தின் உதவி கிடைத்தால், காங்கிரசுக்குள்ள முக்கிய எதிர்ப்பு இல்லாமல் போகுமே என்று, 'சு -மி.' ஆசிரியர் கொண்டுள்ள பேராசையையும்தான் 'சு.-மி.' போக்கு காட்டுகிறது.

இதுவுமல்லாமல், 'தி. மு. கழகம், காங்கிரசுடன் ஒத்துழைக்க வேண்டும்' என்ற அண்ணாதுரை கூறுகிறார் என்று குறிப்பிடுவதினால், தி மு. கழகத்திற்கு இன்று உள்ள செல்வாக்கைக் கொஞ்சமாவது குறைத்துவிடலாம் என்று, 'சு.-மி.' பொறுப்பாசிரியர் கொண்டுள்ள 'இழி குண'த்தையும் இது காட்டுகிறது நிற்க,

"ராஜாஜி மந்திரி சபையில், அனுபவம் மிகுந்தவர்கள் மந்திரிகளாயிருக்கின்றார்கள்," என்ற, நிருபர் புனைந்து கூறிய செய்தியைக் கொண்டுதான், 'ஆச்சாரியாரின் அமைச்சர் குழுவிற்கு அண்ணாதுரை பாராட்டு,' என்று, இரண்டாவது தலைப்புக் கொடுத்து, ஆச்சாரியாரை எந்த வகையிலும் பகலையைவிட்டு கிட்டடிக்காமல் பார்த்துக்கொள்ள வேண்டும் என்ற தனது 'தேசியப் பேராசை'யை, 'சு. மி.' காட்டிக் கொண்டு இருக்கிறது. ஐயோ, பாவம்! 'சு. மி.' ஆசிரியருக்குள்ள 'ராஜாஜி பக்தி'தான் இதிலிருந்து வெளியாகிறதேயல்லாமல், வேறு ஒன்றுமில்லை.

ஆச்சாரியாரை, நண்பர் அண்ணாதுரை, பாராட்டத்தான் செய்தார். ஜாதியைப் பார்க்காமல், தன்னுடைய மகளை 'வைசியர்' மகனுக்குத் திருமணம் முடித்துத் தந்த ஒன்றே ஒன்றுக்குத்தான், ஆச்சாரியாரை அவர் பாராட்டியுள்ளார்.

இதுபற்றி எதும் அறியாதவர்போல் பாவனை செய்து, உண்மையைத் திருத்தி, பொய் மொழி புகலக் கிளம்புகிறதே, சு. மி., அதன் விஷமத்தனத்திற்கு என்ன சன்மானம் கொடுப்பது என்பது நமக்குப் புலனாகமாறு இல்லை.

இதுபற்றி, தோழர் அண்ணாதுரை கூறியுள்ளதாவது :-

'திடீரென்று அமைச்சர்களாகி விடுவதால், பலர், நாட்டு நிர்வாகத்தை ஏற்று நடத்தும்போது, திக்குமுக்காடித் திண்டாடுவதை, நமது நாட்டு அரசியல், தெளிவாக எடுத்துக் காட்டி வருகிறது."

இன்றுள்ள காங்கிரசாரின் ஆட்சி அலங்கோலத்தைத் தான் அவர் எடுத்துக் காட்டியுள்ளாரேயல்லாமல், ஆச்சாரியாரின் அமைச்சர் குழுவில் உள்ள அமைச்சர்கள் எல்லாம் அனுபவமிக்க அசகாய சூரர்கள் என்று அவர் கூறவில்லை. நிற்க,

நகராட்சி மன்றத்தினர் அளித்த வரவேற்பை, தாம் எப்படி கொள்ளுகிறார் என்பதையும் தோழர் அண்ணாதுரையே விளக்கி இருக்கிறார். அதாவது :

"இந்த வரவேற்பு, தனிப்பட்ட முறையில், எனக்குத் தரப்பட்ட ஒன்றாக, நான் கருதவில்லை—நான் சேர்ந்திருக்கும் இயக்கத்திற்கு, தரப்பட்டதாகும்—அது கொண்டிருக்கும் கொள்கைக்குத் தரப்பட்டதாகும்,"

என்று கூறியுள்ளார். ஆனால் 'சு. மி.'-யோ, "தனியாகப் பிரிந்து ஒரு கட்சியை ஆரம்பித்ததினால்தான், என்னைச் சிறந்தவன் எனக் கூற முடியும்" என்று, தோழர் அண்ணாதுரை கூறியதாக, தனது இருதயத்தில் உள்ள, கொல்லாமல் கொல்லும் கொடிய நஞ்சை நிருபர் வரைந்திருப்பதை ஒப்புக்கொண்டு இடர்படுகிறது. ஆச்சாரியாரின் ஆணவப் பேச்சைக் கேட்டுக்கேட்டு காது செவிடாகிவிட்ட ஆசிரியரின் காதுகளில், நமது பொதுச் செயலாளரிடம் இயல்பாக உள்ள தன்னடக்கத்தை வெளிப்படுத்தும் அரசியல் நாகரீகப் பேச்சு விழ முடியாமல் போனதில் ஆச்சரியமொன்றுமில்லை.

இப்படிப் பொய்ச் செய்தியை வெளியிடுவது ஒருக்காலும் அரசியல் நாகரீகம் ஆகவே ஆகாது; ஆச்சாரியார் அமைச்சர் குழுவை வீழ்ச்சியிலே இருந்து தடுத்துவிடவும் முடியாது; மாற்றுக் கட்சியினரின் வேகமான வளர்ச்சியைக் குலைத்து விடவும் முடியாது!

கட்டையைச் சுட்டால் கரியாகும்! தலை ரோமத்தைச் சுட்டால் என்னாகும்?

இப்படி, வெட்டியும் ஒட்டியும் செய்திகளை வெளியிடுவதில் 'சு. மி.-க்கு என்ன ஆசையோ? அதன் ஆசை இறுதியில் நிராசையாகத்தான் போகும்! இனியாவது 'சு. மி.' இதுபோன்று ஆசை கொள்ளாமல் இருப்பது நல்லது!

நாடெங்கும் கைத்தறி வாரம்

அ. இ. கைத்தறி குழு அறிவிப்பு

புதுடெல்லி, ஜன. 7—

இந்தியா முழுதும் விரைவிலேயே 'கைத்தறி அணி வாரம்' கொண்டாடப்படுமெனத் தெரிகிறது. இதுபோலவே ஆண்டுதோறும் கைத்தறி வாரம் கொண்டாடப்படுமென அகில இந்திய கைத்தறி போர்டு அறிவித்தது.

மாநிலங்கள் முழுதும் கைத்தறி வாரம் ஆரம்பிக்கப்படும். கைத்தறி அணிக் கடை நன்றாக அலங்கரிக்கப்படும். கைத்தறித் துணி பொது மக்களின் பார்வைக்கு வைக்கப்படும்.

மாநிலங்களில் இந்த விழாவிற்காக 5 ஆயிரம் ரூபாயும், சமஸ்தானங்களில் கொண்டாட 3 ஆயிரம் ரூபாயும், மத்திய அரசாங்கத்தின் நேரடி நிர்வாகத்திலுள்ள சமஸ்தானங்களில் விழாவுக்காக ஆயிரம் ரூபாயும் கொடுக்க மத்திய அரசாங்கம் இசைந்துள்ளது.

விழாவில் கலந்து கொள்ளும் கூட்டுறவுச் சங்கங்களுக்கு அரசாங்கம் ரு. 10 வீதம் கொடுக்கும்.

துணி ஏற்றுமதி

உலக நாடுகளின் புள்ளி விபரம்

நியூயார்க், ஜன. 9—

1953-ம் ஆண்டில், துணி ஏற்றுமதி செய்த நாடுகளில் இந்தியா இரண்டாவது என அமெரிக்க துணி ஏற்றுமதி சங்கத்தின் அறிக்கை கூறுகிறது.

90 கோடி சதுர கஜம் அளவு துணி ஏற்றுமதி செய்த ஜப்பான், முதலிடம் பெற்றுள்ளது. 1952-ல், நான்காவதாக இருந்த இந்தியா, 1953-ல், 75 கோடி சதுர கஜம் துணிகளை ஏற்றுமதி செய்து இரண்டாவது இடத்தைக் கைப்பற்றியது. 1952ல், மூன்றாவது ஸ்தானத்தில் இருந்த பிரிட்டன், 70 கோடி சதுர கஜம் துணிகளை ஏற்றுமதி செய்து, 1953-லும் அதே இடத்தில் இருந்தது. 1952ல், முதல் ஸ்தானத்தில் இருந்த அமெரிக்கா, 1953-ல், 60 கோடி சதுர கஜம் துணி மட்டும் ஏற்றுமதி செய்ததால் அதற்கு நாலாவது இடம்தான் கிடைத்தது.

சென்னையில் கஞ்சித் தொட்டி

சட்ட சபையில் கேள்வி

சென்னை, ஜன. 7—

"பிழைப்பதற்காக சென்னை வந்திருக்கும் விவசாயிகளுக்கு கஞ்சி ஊற்றப்படுமா?"

என்று இன்று சட்ட சபையில் கேட்கப்பட்டதற்கு, "விவசாயிகளுக்காக கஞ்சித்தொட்டி நடத்தப் போவதில்லை," என்று மந்திரி மாணிக்கவேலர் சொன்னார்.

சென்னை மாநிலத்தில் 4 கஞ்சித் தொட்டிகள் தவிர, மீதி எல்லாவற்றிற்கும், சர்க்காரே எல்லாச் செலவையும் ஏற்று நடத்துவதாகச் சொன்னார் அமைச்சர்.

சென்னை நகரில், நெசவாளர்களுக்காக சென்னை நகர சபை நடத்தி வரும் கஞ்சித் தொட்டியில் 600 பேருக்கு கஞ்சி ஊற்றப்படுவதாகக் கூறினார் அமைச்சர்.

1200 நிருபர்கள்!

வாஷிங்டன், ஜன. 9—

தற்பொழுது நடைபெறும் 83-வது அமெரிக்க காங்கிரசின் நடவடிக்கைகளை உலகத்தின் எல்லாப் பாகங்களிலுமிருந்தும் வந்துள்ள 1,200 நிருபர்கள் கவனித்து வருகின்றனர்.

தூத்துக்குடி சதி வழக்கு விசாரணை

திருநெல்வேலி, ஜன. 8—

தூத்துக்குடி சதிவழக்கு விசாரணை, விசேட முதல் வகுப்பு மாஜிஸ்திரேட் திரு. எஸ். அரிகர அய்யர் முன்பு தொடர்ந்து நடை பெற்று வருகிறது. கடந்த 28—12—53-ந் தேதியிலிருந்து விசாரிக்கப்பட்ட சர்க்கார் தரப்பு சாட்சிகளின், சாட்சிய விவரங்கள் தொடர்ந்து, தரப்படுகிறது:—

55-வது சாட்சி

பிராசிகியூஷன் தரப்பில், 55-வது சாட்சியாக விசாரிக்கப்பட்ட வைத்திய அதிகாரி டாக்டர் ரங்கஸ்வாமி பிள்ளை கூறியதாவது:—

"நான் தூத்துக்குடியில் வைத்திய அதிகாரியாக இருக்கிறேன்; மேலூர் ரயில்வே ஸ்டேஷனுக்குச் சமீபமாக உள்ள ஆண்டாள் தெருவில் வசிக்கிறேன்; ஜூலை 15-ந் தேதி காலை, 8 மணிக்கும், 9 மணிக்குமிடையே நான் வீட்டில் இருந்தேன்; சுமார் 9-க்கு வெளியிலிருந்து யாரோ என்னைக் கூப்பிட்டார்கள்; என்னுடைய வீட்டிற்கு மேற்குப்புறத்தில் சுமார் 30 கெஜ தூரத்தில் ஒரு போலீஸ் லாரி இருந்ததைப் பார்த்தேன்; காயமுண்ட சிலருக்குச் சிகிச்சை செய்யும்படி என்னைக் கேட்டார்கள்; லாரியில், மூவர் இறந்து கிடந்ததையும், சிலர் காயமுற்றிருந்ததையும் கண்டேன்; அபாய நிலைமையிலிருந்த சிலருக்கு நான் பூர்வாங்க சிகிச்சை அளித்தேன்; இவர்களை உடனே ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லும்படி நான் போலீசாரிடம் சொன்னேன்; நான் ஏறக்குறைய அங்கு பார்த்தவர்கள் அனைவரும், துப்பாக்கிக் குண்டினால் காயமடைந்திருந்தார்கள். காயமடைந்தவர்கள் பிறகு ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போகப்பட்டனர்.

"அதே தினத்தில், தூத்துக்குடி 37, புது காலனியில் உள்ள சோமசுந்தரி அம்மாளுக்கு நான் சிகிச்சை செய்தேன்; அன்னாரின் வலது தோள் பட்டையில் மூன்று இடங்களிலும், கை மணிக்கட்டிலும் சிராய்ப்புகள் இருந்தன; காய சர்ட்டிபிகேட் ஒன்றை நான் கொடுத்தேன்; அது எக்ஸிபிட் பி. 44 ஆகத் தாக்கலாகியிருக்கிறது; மறுநாள் போலீஸ் சர்க்கிள் இன்ஸ்பெக்டர் என்னை விசாரித்தார்; காயங்கள் சாதாரணமானவையாகவே இருந்தன."

56-வது சாட்சி

56-வது சாட்சியாக டாக்டர் பி. எஸ். வெங்கடராமன் விசாரிக்கப்பட்டார். அவர் கூறியதாவது:—

"நான், தூத்துக்குடியில் வைத்திய தொழில் நடத்தி வருகிறேன்; சாமிக்குளத்து ஐயர் வீட்டிற்கு நான் குடும்ப வைத்தியன்; ஜூலை 15-ந் தேதி மாலை 3 மணி சுமாருக்கு, குளத்து ஐயரின் பேத்தியான ராஜலட்சுமி அம்மாளை நான் பரிசோதித்தேன்; கழுத்துக்குப் பின்புறத்தில் சிராய்ப்புடன், தோல் கன்னிப் போயிருந்தது; தாலியைத் தாங்கிக் கொண்டிருந்த பொன் சங்கிலி பலவந்தமாகப் பிடித்து இழுக்கப்பட்டதால் மேற்படி காயம் ஏற்பட்டதாகக் கூறப்பட்டது; அன்று காலை சுமார் 10 மணிக்கு அந்தவிடத்தில் அக்காயம் ஏற்பட்டிருக்க வேண்டும்; காயம் சாதாரணமானதுதான்; காயம் சம்பந்தமாக நான் ஒரு சர்ட்டிபிகேட் கொடுத்தேன்; இது எக்ஸிபிட் பி. 45 ஆகத் தாக்கலாகியிருக்கிறது."

57-வது சாட்சி

பின்னர், சாமி குளத்து ஐயர் 57-வது சாட்சியாக விசாரிக்கப்பட்டார். அவர் கூறியதாவது:—

"தூத்துக்குடி 43, புதிய காலனியில் நான் வசிக்கிறேன்; நான் வசிக்கும் தெரு கிழக்கு — மேற்காக இருக்கிறது; நான் வடக்கு வரிசையில் வசிக்கிறேன்; என்னுடைய வீட்டிற்கு எதிரே வீடுகள் கிடையாது; என் வீட்டிற்குக் கிழக்கில் இரண்டு வீடுகள் இருக்கின்றன; அதற்குப் பிறகு ஒரு ரஸ்தா போகிறது; என் வீட்டிற்கு மேற்கில் சப் ஜட்ஜ் மகாராஜ பிள்ளை வசிக்கிறார்; அதற்கு அடுத்த வீட்டில் ராமகிருஷ்ண ஐயர் வசிக்கிறார்; அதற்கு மேற்குப் பக்கத்தில் உள்ள வீட்டில் இம்பீரியல் பாங்கி காஷியர் எம். என். சீனிவாச ஐயங்கார் வசிக்கிறார்; பிறகு வடக்குத் தெற்காக ஒரு ரஸ்தா இருக்கிறது; என்னுடைய வீட்டின் முன்புறத்தில் ஒரு மதில் சுவரும், கேட்டுமிருக்கிறது. என்னுடைய வீடு தெற்குப் பார்த்தாற்போல் உள்ளது. நல்ல கல் கட்டிடம். (இந்த இடத்தில், சாட்சி, தம்முடைய வீட்டுத் தாழ்வாரம், அறைகள் முதலியவற்றைப் பற்றி விவரித்தார்.) ஜூலை 15-ந் தேதியன்று நானும், என்னுடைய பிள்ளையான ராமகிருஷ்ணய்யரும் (இவர் உள்ளூர் இந்தியன் பாங்கியில் குமாஸ்தாவாக இருக்கிறார்), அவருடைய மகள் ராஜலக்ஷ்மியும், ஒரு சமையல்காரியும்தான் வீட்டில் இருந்தோம்; என்னுடைய நாட்டுப் பெண்ணும், ராஜலட்சுமி தவிர, மற்ற குழந்தைகளும் ஒரு மரணம் சம்பந்தமாகக் கல்லிடைக் குறிச்சிக்குப் போயிருந்தார்கள்; ராஜலட்சுமி ஒரு குழந்தையைப் பிரசவித்து, அப்போது 40 நாட்களாயிருந்தன; எங்களுடைய வழக்கத்தையொட்டி அவளை ஒதுக்காக வைத்திருந்தோம்; அவள் ஒன்றையும் தொடக்கூடாது; யார் மீதும் படவும் கூடாது; அவளுக்கு வேண்டியதைச் சமையல்காரி சமைத்துப் போட்டாள்; அவள், பின்புறத்தில் ஒரு அறையில் இருந்தாள்; அவள் பகிஷ்டையானதால், சோமசுந்தரி அம்மாள் என்ற தன் உறவினரை அழைத்து வந்திருந்தாள்; அவள், என் வீட்டிற்கு அருகே வசிப்பவள்; என்னுடைய பிள்ளை பாங்கிக்குப் போவதற்கு முன்னதாக அவள் தான் சாப்பாடு பரிமாறினாள்; அச்சமயம் நான் நடையில் பத்திரிகை படித்துக் கொண்டிருந்தேன்; அப்போது 10 அல்லது 15 பேர் கோஷமிட்டுக் கொண்டே வந்தார்கள்; 'போலீசார் ஏழு பேரைக் கொன்று விட்டார்கள்; ராஜாஜி சர்க்கார் வீழ்க; நேரு சர்க்கார் வீழ்க; பிராமணர்களை யெல்லாம் ஒழித்து விடுங்கள்" என்று கோஷங்கள் எழுப்பின. மேற்படி கோஷ்டியினர் கைகளில் தடிகள் இருந்தன; நான் வெளியே வந்து அவர்களைப் பார்த்தேன்; வீட்டின்மீது அவர்கள் கற்கள் எறிந்து கொண்டிருந்தார்கள்; ஒரு கல் வீட்டிற்குள்ளே விழுந்தது. என் வீட்டிற்குக் கிழக்குப் பக்கத்தில் வருமான வரி வசூல் அதிகாரி வசிக்கிறார்; அவருடைய கார் என் வீட்டிற்கு முன்பாக நின்று கொண்டிருந்தது; கூட்டத்திலிருந்த ஒருவர் ஒரு கழியினால் காரைத் தாக்கினார். பிறகு அவர்கள் கோஷமிட்டுக் கொண்டே போய்விட்டனர்."

மேற்கொண்டு சில கேள்விகள் கேட்டபோது, சாட்சி பதில் சொன்னதாவது:

"காலை 9-30 மணிக்கு நான் வீட்டிற்குள் போய் சாப்பிட்டேன்; சர்க்கார் கடன் பத்திரங்களில் பணம் போடுவதற்கு அதுதான் முதல் தினம்; 2500 ரூ பத்திரங்கள் வாங்க நான் விரும்பினேன்; சென்டிரல் பாங்கியில் எனக்குக் கணக்கிருக்கிறது; சர்க்கார் கடன் பத்திரங்களில் பணம் போடுவதற்காக அங்கு போனேன்; கதவைத் தாளிட்டுக் கொண்டு பத்திரமாக இருக்கும்படி நான் என்னுடைய பேத்தியிடமும், சோமசுந்தரி அம்மாளிடமும் சொன்னேன்; என் வீட்டிற்கு சமீபத்தில் பஸ் நிற்குமிடம் இருக்கிறது; 100 கஜ தூரத்தில் 3-நம்பர் பஸ் கிடைத்தது; சில நிமிஷங்களில் அதில் ஏறிக்கொண்டேன்; கோஷமிட்டுக் கொண்டும் கழிகள் வைத்துக் கொண்டும் சுமார் இருபது, முப்பது பேர்கள் கொண்ட ஒரு கூட்டம் வந்தது; பஸ்ஸில் ஏறக்குறைய 20 பிரயாணிகள் இருந்தனர்; இவர்களில் மூன்று அல்லது நான்கு பேர்கள் பிராமணர்கள்; மேற்படி கூட்டத்தினர் பஸ்ஸை நிறுத்தி எல்லாப் பிராமணர்களையும் இறங்கி விடும்படிச் சொன்னார்கள்; பஸ்ஸில் பிராமணர்கள் யாருமே கிடையாதென்று டிரைவரும், கண்டக்டரும் கூறினர்; கூட்டத்திலிருந்த இரண்டொருவர் பஸ்ஸில் ஏறினர்; அவர்களுடன் சமாதானமாகப் பேசி கீழே இறங்கும்படி வேண்டினார் கண்டக்டர்; அன்றைக்கு, அதற்குமேல் பஸ்ஸை விடுவதில்லை என்று அவர் கூட்டத்தினரிடம் சொன்னார்; பஸ்ஸை, ஷெட்டுக்குக் கொண்டு போகவிடும்படி கோரினார்; ஷெட் விக்டோரியா எக்ஸ்டென்ஷன் ரோடில் இருக்கிறது; அதன் பேரில் பஸ் போக கூட்டம் அனுமதித்தது; பஸ்ஸின் பின்னால் கூட்டம் வந்தது; பஸ் ஷெட்டுக்குப் போவதாக கண்டக்டர் சொன்னதின் பேரில் நான் பஸ்ஸிலிருந்து இறங்கிவிட்டேன்; பக்கத்தில் இருந்த டாக்டர் அகஸ்டைன் வீட்டிற்கு நான் போனேன்; அந்த வீட்டில் டெலிபோன் இருக்கிறது; அச்சமயம் டாக்டர் வீட்டிலில்லை; ஆனால், குடும்பத்தினரை எனக்குத் தெரியும்; டெலிபோன் மூலமாக என் பக்கத்து வீட்டுக்காரரான ராமசாமி சாஸ்திரியை கூப்பிட்டு தெருவில் அசம்பாவிதமாக ஏதாவது நடந்ததா என்று கேட்டேன்; என்னுடைய வீட்டில் சொத்துச் சேதம் ஏற்பட்டிருப்பதாகவும், ஆனால் உயிருக்கு எவ்வித ஆபத்தும் இல்லையென்றும், நான் அவசரப்பட்டு வீட்டிற்கு ஓடிவந்து ஆபத்துக்கு உட்பட வேண்டாமென்றும் அவர் தெரிவித்தார்; பகல் 12 மணி சுமாருக்கு நான் என் வீட்டையடைந்தேன்; என்னுடைய பேத்தி ராஜலட்சுமியையும், சோமசுந்தரி அம்மாளையும் பார்த்தேன்; அவர்களுக்குச் சில காயங்கள் ஏற்பட்டிருந்தன; சில போட்டோக்களும் படங்களும் சேதமாயிருந்தன; எலக்ட்ரிக் பல்புகளில் எட்டு அல்லது பத்து சேதமாகியிருந்தன; கண்ணீர் வடித்துக்கொண்டே ராஜலட்சுமி என்னிடம் சொன்னதில் இரண்டு திருமங்கல்யங்களும், ஒரு சிறிய தங்கக் குண்டும் கெட்டுப் போய் விட்டதென்றும், யாரோ சிலர் வீட்டிற்குள் நுழைந்து, தன்னுடைய தங்கச் சங்கிலியைப் பிடித்து இழுத்ததாகவும் தெரிவித்தாள்; தன்னுடைய தங்கச் சங்கிலியில் ஒரு பகுதி பறிக்கப்பட்டு விட்டதாக சோமசுந்தரி அம்மாள் சொன்னாள்; என் மேஜைமீது வைத்திருந்த மூக்குக் கண்ணாடியும், இன்னும் சில சாமான்களும் எடுத்துச் செல்லப்பட்டிருந்தன; கம்பிக் கதவிலிருந்த கம்பிகளில் ஒன்று நீக்கப்பட்டிருந்தது; இதன் மூலமாக, ஒருவர் தன்னுடைய கையை விட்டுக் கதவைத் திறந்து விடலாம்; சுவற்றில் மாட்டப்பட்டிருந்த கடியாரமும், முதல் அறையிலிருந்த நான்கு அல்லது ஐந்து படங்களும் சேதப்படுத்தப்படிருந்தன; ஹாலிலும் ஒரு கடியாரமும், சில போட்டோக்களும், பெரிய கண்ணாடியும் சேதமுற்றிருந்தன; சென்ற இருபது வருடங்களாக மூக்குக் கண்ணாடியை நான் உபயோகித்து வந்தேன். அதைக் காட்டினால், நான் அடையாளம் கண்டுபிடிக்க முடியும்."

"ராஜலட்சுமி 5-வது பாரத்தையில் படித்திருக்கிறாள்; போய்விட்ட சொத்துக்களின் மதிப்பைச் சொல்லி ஒரு புகார் எழுதும்படி நான் அவளுக்குச் சொன்னேன்; அவள் புகார் கொடுத்தாள். இது எக்ஸிபிட் பி. ஆக தாக்கலாகியிருக்கிறது; அன்றிரவு சுமார் 8 மணிக்கு போலீஸ் சப்-இன்ஸ்பெக்டர் வீட்டிற்கு நான் போனபோது மேற்படி புகாரை அவரிடம் கொடுத்தேன்; போலீஸ் சர்க்கிள் இன்ஸ்பெக்டர் மறுதினம் என்னை விசாரித்தார்; கூட்டத்திலிருந்தவர்களை மறுபடியும் பார்த்தால் நான் அடையாளம் கண்டுபிடிக்க முடியும்; முதல் கூட்டத்தில், ஏ.92-ஐ (பொன்னுசாமி) நான் பார்த்தேன்; இந்தக் கூட்டம், வீடுகளின் மீது கற்களை வீசிக்கொண்டே சென்றது; கூட்டத்தில், ஏ. 91 ராஜாமணியை நான் பார்த்தேன்; இந்தக் கூட்டம் தான் பஸ்ஸை வழி மறித்தது."

வழக்கறிஞர் திரு. தங்கசாமியினால் குறுக்கு விசாரணை செய்யப்பட்ட போது சாட்சி கூறியதாவது:

"பிராம்மணர்களைக் கொல்லுங்கள்" என்று கூட்டம் கூச்சலிட்டபோதும் நான் பயப்படவில்லை; பஸ்ஸை வழிமறித்ததிலிருந்து டெலிபோன் மூலம் பக்கத்து வீட்டுக்காரருடன் பேசியது வரையில் எனக்குப் பயமாக இருந்தது; சோமசுந்தரி அம்மாளுக்கு 40 வயதாகிறது; இதற்கு முன்னதாக எங்களுக்கு உதவ அவள் வந்திருக்கிறாளா என்று என்னால் சொல்ல முடியாது; நான் பாங்கியிலிருந்து திரும்பும் வரையில் வீட்டில் இருக்கும்படியாக அவளிடம் நான் சொல்லவில்லை; போலீஸ் சப்-இன்ஸ்பெக்டர் தம்முடைய வீட்டில் சுமார் 45 நிமிடங்கள் இருந்தார்; எங்களுடைய புகாரை அவர் முன்னமேயே வாங்கிக் கொண்டுவிட்டார்; என்னை விசாரித்தபோது, அவர் ஒன்றும் எழுதிக் கொள்ளவில்லை; சொத்துச் சேதம் பற்றி அவர் குறித்துக் கொள்ளவும் இல்லை."

வழக்கறிஞர் திரு. எம். நெல்லையப்ப பிள்ளையினால் குறுக்கு விசாரணை செய்யப்பட்டபோது சாட்சி கூறியதாவது:—

"1919 முதல் 1935 வரையில், ஏ. ஆர். ஏ. ஆறுமுகசுவாமி நாடார் 'பர்மி'ல் நான் பார்ட்னராக இருந்தேன்; 'பர்மு'க்காக பல வழக்குகளை நடத்தியதால் சட்ட விஷயங்கள் எனக்குத் தெரியும்; என்னிடம் செக் புத்தகமே இருந்தது; பணமில்லை; நான் வெளியே சென்றபோது வீட்டில் ஆண் வேலைக்காரர் யாரும் இல்லை."

கைத்தறி நெசவு அபிவிருத்திக்கு இந்திய சர்க்கார் திட்டங்கள்

சென்னை மாநிலத்தில் ஐந்தரை லட்சம் கைத்தறிகள்

புதுடில்லி, ஜன. 8—

கைத்தறி நெசவுத் தொழில் அபிவிருத்திக்காக இந்திய சர்க்கார் சமீபத்தில் 92 திட்டங்களை அனுமதித்துள்ளனர். மாநில சர்க்கார்களினால், சமர்ப்பிக்கப்பட்ட 220 திட்டங்களை இந்திய சர்க்காரால் பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது.

• • •

சென்ற ஆண்டில், 83 கோடி ரூபாய் பெறுமானமுள்ள கைத்தறி ஜவுளி, 28,93,271 கைத்தறிகள் மூலம் இந்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன. 12,80,000 பேர் கைத்தறிகளில் முழுநேர வேலை செய்தனர்; ஏராளமான பேர்கள் பாதி நேரம் வேலை செய்துள்ளனர்.

• • •

சென்னை மாநிலத்தில்தான் கைத்தறிகள் அதிகமாக உள்ளன; இதன் எண்ணிக்கை 5,59,883 அவ்வளவில், 4,79,807 தறிகளைக் கொண்டுள்ளது.

ஒரு லட்சம் தறிகளுக்கு மேல் உள்ள மாநிலங்கள்—ஆந்திரா, உத்தர பிரதேசம் பீகார், பம்பாய், ஹைதராபாத் மத்திய பிரதேசம் மணிப்பூர் ஒரிஸா ஆகியவைகளாகும்.

ஹிமாசலப் பிரதேசம், விந்திய, குடகு, டில்லி, வீரோடு ஆகிய மாநிலங்களில், ஆயிரம் தறிகளுக்கும் குறைவாகவே உள்ளது; இதர மாநிலங்களில், ஆயிரத்துக்கு மேற்பட்டு, ஒரு லட்சத்திற்குக் குறைந்த தறிகளே உள்ளன.

ஒலிபெருக்கிக்கு அனுமதி ஏன்?

சட்ட சபையில் கேள்வி

சென்னை, ஜன. 7—

ஒலிபெருக்கியை உபயோகிப்பதற்கு, அரசாங்கம், லைசென்ஸ் கட்டணம் வசூலிப்பதைப் பற்றி எதிர்க் கட்சி உறுப்பினர்கள், இன்று, சட்ட சபையில் கேள்விகள் கேட்டனர்.

"ஒரே இடத்தில் இரு கட்சியினர் ஒலி பெருக்கி வைத்துக் கூட்டம் போடுவதால், தகராறு ஏற்படும்; அதை ஒழுங்குப்படுத்துவதற்காக லைசென்ஸ் முறை ஏற்படுத்தப்பட்டுள்ளது," என, நிதி மந்திரி சுப்பிரமணியம் கூறினார்.

"இதுபோல கட்டணம் வசூலிப்பது, நியாயமற்றது; பேச்சுரிமையைக் கட்டுப்படுத்துவதாகும்," என நாராயண நம்பியார் கூறினார்.

"கல்வி, கலாச்சாரக் கூட்டங்களுக்கு விதிவிலக்கு உண்டா?" என்று மற்றொரு உறுப்பினர் கேட்டார்.

"கல்வி, கலாச்சாரம் என்ற போர்வையில் அரசியல் கூட்டமும் நடைபெறுகிறது; அது கல்வி சம்பந்தமான கூட்டமா என்பதைக் கவனிக்கிறேன்," என்றார் அமைச்சர்.

"இந்த லைசென்ஸ் முறை, அதிகக் கூட்டங்களை தடுக்கவா, அல்லது அதிக வரி வசூலிக்கவா?" என்று உறுப்பினர் வெங்கடேச சோழகர் கேட்டார்.

"இதனால் அதிக வருமானம் கிடையாது; கைகலப்பைத் தடுக்கவேதான்," என்று மந்திரி சொன்னார்.

"காங்கிரஸ் உறுப்பினர்:— ஏகாதசி, கார்த்திகை நாட்களில், தாராளமாக லைசென்ஸ் தரப்படுமா?"

மந்திரி:— "தரப்படும்; ஆனால், அதே நேரத்தில், அமைதியாக ஓய்வு நேரத்தைக் கழிக்கவேண்டியவர்களையும் கவனிக்க வேண்டியுள்ளது."

டி. கே. ராஜா:— ஒலிபெருக்கியை உபயோகிப்பதால் தொல்லை ஏற்படுகிறது; இதை அரசாங்கம் தடைப்படுத்துமா?"

முதலமைச்சர் குறுக்கிட்டு, காற்றுக்கு உலகில் கட்டுப்பாடு இல்லை; ஒரு மனிதன், அதிகமாக சப்தம் செய்யக் கூடாது; அப்படி செய்வதைத் தடுக்க அரசாங்கத்தைத் தவிர வேறு யாரால் முடியும்?"

இலங்கை இந்தியர் பிரஜா உரிமை

கொழும்பு, ஜன. 8—

இலங்கை சர்க்கார் பார்லிமெண்டரி கட்சிக் கூட்டம், இலங்கை இந்தியர் பிரச்னையை பற்றி பரிசீலனை செய்தது. ஒரு முடிவுக்கு வராமல் இக்கூட்டம் முடிந்தது.

தோழர்கள் வைத்திலிங்கம், சிற்றம்பலம், கந்தையா ஆகியோர் இந்தியரின் நலன் குறித்து வாதாடினர்.

கடைசியாக இலங்கைப் பிரதமர் கொத்தலாவலை பேசியதிலிருந்து, 'அவர் தமிழர்களின் கோரிக்கைக்கு இணங்கி வருகிறார்,' என்று சொல்லப்படுகிறது.

வெங்காய இறக்குமதிக்குத் தடை!

கொழும்பு, ஜன. 9—

இலங்கையின் வெங்காய உற்பத்திக்குப் பாதகம் ஏற்படாதிருக்க, தக்க அறுவடை சமயத்தில், வெங்காய இறக்குமதி தடை செய்யப்பட்டு விடும். யாழ்ப்பாணத்தில் மட்டும் 2,500 டன் வெங்காயம் உற்பத்தி எதிர்பார்க்கப்படுகிறது; இந்த வெங்காயம் எடுபட்டபின் உள்நாட்டுத் தேவைக்குப் பத்தாயிரம் டன் இருக்கும்; அப்போதுதான், வெங்காய இறக்குமதிக்குத் தடை விதிக்கப்படும். இந்தியா ஏராளமான வெங்காயத்தை இலங்கைக்கு ஏற்றுமதி செய்கிறது.

"கோரக் கொலை வழக்கில் சம்பந்தப்பட்டவர்களை விடுதலை செய்ய இயலாது"

—(:)—

சட்டசபையில் சட்ட மந்திரி பதில்

சென்னை, ஜன. 8—

இன்று சென்னை அசெம்பிளியில், டி. சி. நாராயண நம்பியாரின் கேள்விக்கு சட்ட மந்திரி பதிலளிக்கையில் குறிப்பிட்டதாவது:

"கண்ணனூர் மத்திய சிறையிலுள்ள கம்யூனிஸ்டு கைதிகளை விடுவிக்கும்படி ஒரு மகஜர் வந்துள்ளது. பல கொலைக் குற்றங்களுக்காக தண்டிக்கப்பட்டவர்களை விடுதலை செய்வது சாத்தியமல்ல," என்றார்.

"மக்கள் ஒருமித்து அனுப்பியுள்ள கோரிக்கையை, சர்க்கார் பரிசீலனை செய்யுமா?" என்று கேட்கப்பட்ட கேள்விக்கு ஆச்சாரியார் பதிலளிக்கையில் குறிப்பிட்டதாவது:

"கிரிமினல் குற்றங்களில், மக்களின் மகஜர் மூலம் நீதி வழங்க முடியாது. கோர்ட்டால் தண்டிக்கப்பட்ட கைதிகளுடனும், கிரிமினல் குற்றவாளிகளுடனும் கொஞ்சி விளையாட முடியாது," என்றார்.

எகிப்துக்கு புதிய இந்தியத் தூதுவர்

புது டெல்லி, ஜன. 8—

தோழர் கே. எம். பணிக்கருக்கு அடுத்தபடியாக தற்சமயம் அர்ஜெண்டைனாவில் இந்திய ஸ்தானிகராக உள்ள நவாப் அலியவர் எகிப்து ஸ்தானிகராக நியமிக்கப்பட்டுள்ளார் என்று நம்பத்தகுந்த வட்டாரங்களில் பேசப்படுகிறது. இதுபற்றி அரசாங்க அறிக்கை இன்னும் வரவில்லை.

ஆந்திராவில் கைத்தறிக் குழு

கர்நூல், ஜன. 8—

கைத்தறித் தொழிலின் பாதுகாப்பு—வளர்ச்சி குறித்து தங்களுக்கு ஆலோசனை கூற ஆந்திர சர்க்கார் 11 உறுப்பினர்கள் கொண்ட ஒரு குழுவை நியமித்துள்ளது.

தோழர் கே. ஏ. மதியழகன் சுற்றுப் பயணம்

★

ஜன. 10: திருச்சி
,, 11: தஞ்சாவூர்
,, 14: சென்னை
,, 15: காஞ்சீபுரம்
,, 16: கடலூர்
,, 17: சிதம்பரம்

(அண்ணா லைகர்)

வ. உ. சி. இளைஞர் கழகம், சேத்துப்பட்டு

12—1—54 செவ்வாய் மாலை 6 மணிக்கு, சென்னை, சேத்துப்பட்டு வைத்தியநாத முதலி தெருவில், தோழர் சி. மனோகரன் தலைமையில், பொதுச் செயலாளர் அண்ணாதுரை, தோழர் நெடுஞ்செழியன் ஆகியோர் பேசுவர்.

கைத்தறி துணி விற்பனை

நாமக்கல், ஜன. 8—

பொதுச் செயலாளர் தோழர் அண்ணாதுரை அவர்களின் வேண்டுகோள்படி இவ்வூர் கணேசபுரம் தமிழ்ச் சங்கக் கட்டிடத்திலிருந்து காலை 8-மணிக்குப் புறப்பட்டு, வீதிதோறும் கைத்தறித் துணி விற்பனை செய்து வரப்பட்டு, மாலை 5 மணிக்கு திரு வி. க. பாலையின்முன் விற்பனை ஊர்வலம் கலைவுறும்.

சுகவாழ்வுக்கு மருந்து!

வாஷிங்டன், ஜன. 9—

"மனித வர்க்கம் நோய்நொடியின்றி சுகமாக வாழ, மேல் நாட்டு—கீழ் நாட்டு வைத்திய முறைகளைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்" என்று வைத்திய ஆராய்ச்சி நிலைய டைரக்டர் கூறியுள்ளார். இந்திய விஜயத்தின் போதிலிருந்து ஆயுர்வேத வைத்தியத்தில் சிரத்தை காட்டி வருகிறேன் என்று அவர் மேலும் கூறினார்.

ஒரு கோடி செலவில் பௌத்த மத வைபவம்!

ரங்கூன், ஜன. 9—

பர்மா சரித்திரத்தில் மட்டுமின்றி ஆசியாவின் சரித்திரத்திலேயே மகத்தான பௌத்த மத வைபவமான "ரத்த சங்காயனு" வருகிற மே மாதம் ரங்கூனில் நடைபெற இருக்கிறது. இதற்காக, பர்மிய சர்க்கார் ஒரு கோடி ரூபாய் ஒதுக்கியுள்ளனர்.

காஞ்சியில் தோழர் மதியழகனுக்குப் பாராட்டு

15—1—54 வெள்ளி மாலை 6 மணிக்கு, கெங்கைகொண்டான் மண்டபத்தருகில், கே. ஏ. மதியழகனுக்குப் பாராட்டுக் கூட்டம் நடைபெறும். பொதுச் செயலாளர் அண்ணாதுரை பாராட்டுரை வழங்குவார்.

குறிப்பு:—அத்தாக்குடி சதி வழக்குக்கு, இதுவரை நிதி செலுத்தாத நகரக் கிளைக் கழகங்கள் உடனடியாக நகர செயலாளரிடம் நிதிக்காக வசூலித்த பணத்தை செலுத்த வேண்டுமென்றும், 15—1—54-ல் நடைபெற இருக்கும் பொதுக்கூட்டத்தில் பொதுச் செயலாளரிடம் அத்தாக்குடி நிதி அளிக்கப்படும் என, நகர செயலாளர் இரா. வெங்கடேசன் அறிவிக்கிறார்.

அண்ணாமலை நகரில் தோழர் அண்ணாதுரை

"பொதுச் செயலாளர் அண்ணாதுரை அவர்களும், தோழர்கள் கே. ஏ. மதியழகன், என். வி. நடராசன், ஏ. கோவிந்தசாமி, எம். எல். ஏ., மற்றும் பலரும் 17—1—54 ஞாயிறன்று அண்ணாமலை நகரில், தி. மு. கழகத்தின் சார்பில் நடைபெறும் பொங்கல் விழாவில் கலந்துகொண்டு சொற்பொழிவாற்றுவர்" என, தோழர் சிந்தனைச் செல்வன் அறிவிக்கிறார்.

பொதுச் செயலாளர் அண்ணாதுரை நிகழ்ச்சிகள்

ஜன. 10: திருச்சி
,, 11: தஞ்சாவூர்
,, 12: சென்னை சேத்துப்பட்டு
,, 13: சென்னை
,, 14: சென்னை—பொங்கல் விழா
,, 15: காஞ்சி — பொங்கல் விழா — மதியழகன் வரவேற்புக் கூட்டம்
,, 16: கடலூர் — பொங்கல் விழா
,, 17: சிதம்பரம்

இளமுருகு—பொற்செல்வி சுற்றுப் பயணம்

☆

ஜன. 14: திருச்சி
,, 16: தொரவையூர்
,, 17: சென்னை
,, 28: கோவை
,, 29: மணவை

கழகக் கூட்டங்கள்

★

தஞ்சை

11-1—54 திங்கள் மாலை 5 மணிக்கு

இடம்: தஞ்சை திலகர் திடல்

பேசுவோர்:
அண்ணாதுரை
ஈ. வெ. கி. சம்பத்
கே. ஏ. மதியழகன்
என். வி. நடராசன்

பெண்களுக்கு தனி இடம் உண்டு

★

தொரவையூர்

16—1—54 சனி மாலை

தலைவர்: எஸ். வி. லிங்கம்

பேசுவோர்:
சி. பி. சிற்றரசு
இளமுருகு பொற்செல்வி

☆

மாயூரம்

ஆசிரியர் வேலாயுத மன்ற 3 வது ஆண்டு விழா

16—1—54 சனி மாலை 6 மணிக்கு

இடம்: மாயூரம் நகரப் பூங்கா

தலைவர்: வி. சங்கையன்

கொடியேற்றுபவர்: ஆர். பழனிச்சாமி

பேசுவோர்:
ஈ. வி. கே. சம்பத்
எஸ். அப்பாவு
ஆர். பாலகுருசாமி
கே. ஆர். சம்பந்தம், எம். எல். ஏ.
வை. மாணிக்கம்

☆

கமுதி

17—1—54 ஞாயிறு மாலை

தலைவர்: முகவை ஆர் எஸ். பாண்டியன்

பேசுவோர்:
ஏ. வி. பி. ஆசைத்தம்பி
மு. வசனப்பித்தன்

ஆந்திராவில் மதுவிலக்கு ரத்து?

கர்நூல், ஜன. 7—

இன்று ஆந்திர அசெம்பிளியில் 'கலால்' மானியம் நிறைவேறியது.

சர்க்காருக்கு சாதகமாக 69 ஓட்டுகள் கிடைத்தன. அடுத்த ஆண்டில் ஆந்திர சர்க்கார் மதுவிலக்கை ரத்து செய்யுமென்று உறுதிமொழி அளித்தார். அதன் பிறகுதான் ராயலசீமாவைச் சேர்ந்த எம். எல். ஏ.-க்கள், சர்க்காரை ஆதரித்ததாக அறியப்படுகிறது.

★★★★★★★★★★

"திராவிட நாடு" பொங்கல் மலர்

★

பொங்கல் மலருக்காக முன்பணம் அனுப்பாத ஏஜண்டுத் தோழர்களுக்குக் கண்டிப்பாக மலர் அனுப்பப்பட மாட்டாதென்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

10—1—54-ந் தேதிக்குள் பணம் அனுப்புகிறவர்களுக்கு மட்டுமே, கூடுமான வரையில் முயற்சி செய்து, கையிலிருக்கும் பிரதிகளை அனுப்ப ஏற்பாடு செய்யப்படும்.

—மானேஜர்.

★★★★★★★★★★★★

பார்க்பேர் பொருட்காட்சி

தோழர் அண்ணாதுரை தலைமையில் 'இன்பக் கனவு' நாடகம்

சென்னை, ஜன. 8—

சென்னை பார்க்பேர் பொருட்காட்சியில், நேற்று மாலை 6-30 மணிக்கு புரட்சி நடிகர் எம். ஜி. ராமச்சந்திரன் குழுவினரின் 'இன்பக் கனவு' நாடகம் நடைபெற்றது. நாடகத்திற்கு தி. மு. கழகப் பொதுச் செயலாளர் தோழர் அண்ணாதுரை தலைமை வகித்தார்.

கதை அமைப்பும், நாடகத்தில் பங்கேற்றவர்களின் நடிப்பும் போற்றுதற்குரிய வகையில் அமைந்திருந்தது.

நாடக முடிவில் தி. மு. கழகப் பொதுச்செயலாளர் தோழர் சி. என். அண்ணாதுரை, பொருட்காட்சி நிர்வாகிகளையும், நடிகர் எம். ஜி. ராமச்சந்திரன் ஆகியோரையும் பாராட்டிப் பேசினார்.

பொதுச்செயலாளர் அண்ணாதுரை அவர்களோடு தோழர்கள்: அ. பொன்னம்பலனார், கே. ஏ. மதியழகன், செழியன், காஞ்சி-கல்யாணசுந்தரம், நடிப்புப்புலவர் கே. ஆர். ராமசாமி, எஸ். எஸ். பி. லிங்கம், க. அன்பழகன், சி. வி. ராசகோபால், சுந்தரம் ஆகியோர் வந்திருந்தனர்.

இந்தோனேஷிய கலக இயக்கம்

அந்நியர் உதவி

புது டில்லி, ஜன. 8—

இந்தோனேஷிய கலக இயக்கங்களில் அந்நிய நாட்டினர் சம்மந்தப்பட்டிருக்கிறார்கள் என்பதற்கு, மேலும் பல ருசுக்கள் இந்தோனேஷிய சர்க்காருக்குக் கிடைத்துள்ளது.

வட சுமாத்ராவில் ஒரு டம்பாச்சாரி கப்பலில் ஒரு அந்நியர் கைது செய்யப்பட்டதைத்தொடர்ந்து, பல இடங்களில் சோதனைகள் நடைபெற்றன. அந்நியர் பலர் கைது செய்யப்பட்டனர். அவர்களில் பெரும்பாலோர் பெரும் பணக்காரர்கள் என்றும், வணிகர்கள் என்றும் சொல்லப்படுகிறது.

மேலும் மூவர்!

டோக்கியோ, ஜன. 8—

ஜப்பானிய மந்திரி சபை இன்று திருத்தியமைக்கப்பட்டது. பிரதம மந்திரி யோஷிடா மூன்று புதிய மந்திரிகளை நியமித்தார். மூவரும் யோஷிடாவின் லிபரல் கட்சியைச்சேர்ந்தவர்கள் என்று சொல்லப்படுகிறது.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால், அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று (24, சூரிய நாராயண செட்டித் தெரு, இராயபுரம்) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: சி. என். அண்ணாதுரை, எம். ஏ.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

கைத்தறித் துணி விற்பனை

—(:)—

ஜன. 10 முதல் 13-ம் நாள் வரை

—(:)—

நான்கு நாட்கள் நாடெங்கும் கழகத் தோழர்கள் நடத்துவர்

கதியற்று நிற்கும் ஏழைக் கைத்தறியாளரின் கண்ணீரைத் துடைக்கவும், அவர்களைக் கைதூக்கி விடவும், பொங்கற் புது நாளைப் பொலிவோடும், பூரிப்போடும், பெருமையோடும் நாடெங்கும் கொண்டாடும்படி செய்யவும் திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்கள், ஜனவரித் திங்கள் 10-ம் நாளிலிருந்து, 13-ம் நாள் வரை ஊர்தோறும் கைத்தறித் துணி விற்பனை செய்ய வேண்டுகிறேன்.

—அண்ணாதுரை.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★